## அரசியல் பாகுபாடு இல்லாமல் ஆட்சியின் செயல்பாடுகள் அமைய வேண்டுமென்று விரும்பும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினை பிற மாநிலங்களும் போற்றுகின்றன!

## முதல்வரின் மாசற்ற குண நலன்களை தெளிவாக அறிந்து கொள்கின்றனர்!

**சென்னை, டிச.1-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை இந்தியாவில் பல்வேறு அரசியல் தலைவர்களும், வெளிநாடுகளும் பாராட்டி வருவதைப் போல, தலைவர்களும், ஊடகங்களும் முதலமைச்சரின் பண்பு நலன்களுக்குப் பாராட்டுகின்றன.**

இதுபற்றிய விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய குணநலன்கள், ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றைத் தமிழ்நாடு மாநில பா.ஜ.க கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் மனம் திறந்து பாராட்டியுள்ளார். செய்தியாளர்களிடம் இன்று பேசும்போது, “மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பொறுத்தவரை அவரிடம் கேட்டால் எதையும் நிச்சயமாகச் செய்யக்கூடியவர். என்னுடைய தொகுதிக்கு பாலங்கள், சாலைகள், கல்லூரிகள் ஆகியவற்றையெல்லாம் செய்திருக்கிறார்” என்று கூறியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் குணநலன்களைக் குறித்து நயினார் நாகேந்திரன் அவர்கள் பாராட்டி கூறியுள்ளது புதுமையல்ல; முதலமைச்சர் அவர்களுடைய மனம் எப்போழுதும் நன்மையையே விரும்பக்கூடியது. ஆட்சிப் பொறுப்பேற்ற பின் பள்ளிக் கல்வித்துறையில் மாணவர்களுக்கு வழங்கக்கூடிய பைகளில் முன்னாள் முதல்வர்கள் செல்வி ஜெயலலிதா, எடப்பாடி பழனிசாமி ஆகியோர் படங்கள் பொறிக்கப் பட்டிருந்தன. அதிகாரிகள் அந்தப் பைகளைப் பயன்படுத்த வேண்டாம்; முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் படத்துடன் புதிய பைகள் தயாரித்து வழங்கலாம் என்று முடிவு செய்துவிட்டனர்.

அதுகுறித்த விவரம் தம் கவனத்திற்கு வந்தவுடன், “பள்ளி மாணவ, மாணவிகளின் பைகளில் முன்னாள் முதல்வர்களின் படங்களே இருக்கட்டும். என் படத்தைப் பயன்படுத்த வேண்டாம். அதற்கு ஆகும் செலவை மாணவ, மாணவிகளின் கல்விச் செலவுக்குப் பயன்படுத்துங்கள்” என்று கூறி முன்னாள் முதல்வர்கள் படங்கள் அச்சிடப்பட்ட பைகளையே மாணவ, மாணவிகளுக்கு வழங்கச் செய்தார். மேலும், தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படும் பாராட்டுச் சான்றிதழ்களில் முதல்வரான தன் படத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் அறி வித்தார்கள்.

### பிற மாநில அரசியல் தலைவர்கள் பாராட்டு!

இதுமட்டுமல்ல; முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நிலையில் அரசியல் பாகுபாடு இல்லாமல் பொது நோக்கத்துடன் செயல்பட்டு வரும் முதலமைச்சர் அவர்கள் மற்றவர்களையும் அவ்வாறே செயல்பட வேண்டும் என்று வழிகாட்டினார்.

முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பு வெளியானவுடன் பிற மாநிலங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி செய்திகள் வெளியிட்டனர்.

அதைவிட ஒரு படி மேலாக உலக நாடுகளின் அதிபர்கள் கூடும் ஐ.நா. அவையே மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்தச் செயலைப் பாராட்டிப் பேச வேண்டும் என்றும், இதனால் மற்ற



நாடுகளும் இந்தச் சுயநலமில்லாத அரசியலைப் பின் தொடரலாம் என்றும் ஐ.நா. அவையில் வலியுறுத்த உள்ளதாக ஐ.நா.வின் முக்கிய நிர்வாகிகள் ஊடகங்கள் வாயிலாகப் பேசி வருகிறார்கள் என ‘போஸ்ட் பாக்ஸ்’ எனும் யுடியூப் சேனல் 11.9.2021 அன்று காணொலியில் குறிப்பிட்டது.

### ஐ.நா. அவையே முதல்வருக்கு பாராட்டு!

முந்தைய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு முழுவதிலும் அம்மையார் செல்வி ஜெயலலிதா அவர்களின் படங்களுடன் அம்மா உணவகங்கள் செயல்பட்டு வந்தன. அந்த உணவகங்களின் பெயர்களை மாற்றாமல் அப்படியே அவை செயல்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைக்கு அறிவுரைகள் வழங்கியதுடன், அவை சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

நேற்று முன்தினம் (28.11.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் செல்வி ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தில் மூன்றாம் பட்டமளிப்பு விழாவில் திரைப்பட நடிகர் சிவகுமார், ஓவியக் கலைஞர் குருசாமி சந்திரசேகரன் என்னும் சந்துரு இருவருக்கும் வாழ்நாள் சாதனையாளர் எனப் புகழ்ந்து மதிப்புறு முனைவர் பட்டங்களை வழங்கியதுடன், 1846 மாணவ, மாணவிகளுக்கும் கவின் கலைகளில் பட்டங்களை வழங்கிப் பாராட்டினார். அப்போது உரையாற்றுகையில், “ என்னைப் பொறுத்தவரை, அம்மையார் ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம், இதற்கு நாங்கள் எந்தப் பாகுபாடும் காட்டவில்லை; இந்தப் பட்டமளிப்பு விழாவைக் கூட நாங்கள் புறக்கணிவும் இல்லை. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், 2021க்குப் பிறகு, இந்த யுனிவர்சிட்டியை இன்னும் செழுமையாக வளர்த்திருக்கிறோம்! இதுதான், நான் நிறுவ நினைக்கும் அரசியல் மாண்பு! இந்த அரசியல் மாண்பு நடுவில் இல்லாமல் சென்றிருந்தாலும், எதிர் காலத்தில் நிச்சயமாக எப்போதும் தொடர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

2021க்குப் பிறகு, இந்த யுனிவர்சிட்டியில் நிறைய மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். புதிய பாடத்திட்டங்களை அறிமுகம் செய்து, நல்கை நிதியை உயர்த்தி ஆராய்ச்சி மையம் நூலகம் கற்றல் மேலாண்மை ஆகிய பல அமைப்புகளை உருவாக்க ஒரு கோடி ரூபாய் வழங்கினோம்!

கடந்த ஆண்டு மார்ச் 8 ஆம் நாள், இப்பல்கலைக்கழகத்திற்காகக் கட்டப்பட்ட 15 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தேன்” என்று தெரிவித்தார்கள்.

மேலும், “இசை மற்றும் கவின் பல் கலைக் கழகத்தின் நிர்வாகத்திறன் மற்றும் கற்பிக்கும் திறனை மேம்படுத்தும் வகையில், ஊதியம் மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்காக தற்போது வழங்கப்படும் 3 கோடி ரூபாய் மானியத் தொகை 5 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்” என்ற அறிவிப்பையும் வெளியிட்டார்கள்.

இத்தகைய செய்திகளை எல்லாம் எண்ணும் பொழுது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசியல் பாகுபாடு இல்லாமல் சமநிலையுடன் சமத்துவமான சிந்தனைகளுடன் ஆட்சியின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்று விரும்புவதையும், அதன்படியே தொடர்ந்து செயல்பட்டு வருவதையும், அதனால்தான் மற்ற மாநிலங்களும், மற்ற மாநிலங்களின் அரசியல் தலைவர்களும் முதலமைச்சர் அவர்களைப் போற்றி வருகிறார்கள்! புகழ்கிறார்கள் என்பது விளங்கும்!

### பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் பாராட்டு!

பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டியுள்ளதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மாசற்ற குண நலன்கள் தான் காரணம் என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஒருங்கிணைந்த வேளாளர் வெள்ளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, அனைத்து முதலியார் வேளாளர் சங்கங்களின் பேரவை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் மரியாதை நிமித்தம் சந்தித்து, கோரிக்கை மனு அளித்தனர். உடன் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.




திருச்சி மாவட்டத்தில் உள்ள 14 பேரூராட்சிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான நியமன உறுப்பினர் ஆணையை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு வழங்கினார். அருகில் பேரூராட்சிகள் உதவி இயக்குனர் துவாரகாநாத், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்ட பொருளாளர் துரைராஜ், சீனிவாச பெருமாள் கோல்டன் ராஜேந்திரன் உட்பட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

## நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம்

# ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, டிச.1-

“வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:



**மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டே, தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒன்றிய பா.ஜ.க. அரசு புறக்கணிப்பது சரியா?**

**தமிழ்நாட்டின் கோரிக்கைகளை-தேவைகளைக் கடிதங்களாக, நேரில் மனுக்களாக, சட்டமன்றத் தீர்மானங்களாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்காமல் இருப்பது நியாயமல்ல!**

**அதிகமான வரி வருவாயைத் தரும் மாநிலமான தமிழ்நாட்டுக்கு வஞ்சனை செய்வதை மனச்சாட்சியுள்ள யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். உங்கள் வஞ்சனைகளைக் கடந்துதான் நாட்டிலேயே அதிகமான 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கிறோம். குட்ட குட்ட குனிய மாட்டோம்; நிமிர்ந்து நடைபோடுவோம்!**

**வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடரில், தமிழ்நாட்டு மக்களின் பிரதிநிதிகளிடம் ஒன்றிய பா.ஜ.க. அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.